**கவனிக்க.-** 2025.11.14 ஆந் திகதிய 2463 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2464 - 2025 නොවැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2025.11.21

2464 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2318 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2341 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2315 - B 82739- 403 (2025/11)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## தொழில் திணைக்களம்

## அடிப்படை ஓரளவு தேர்ச்சியுடைய சேவை வகை பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல் - 2025

தொழில் திணைக்களத்தில், அடிப்படை ஓரளவு தேர்ச்சி யுடைய சேவை வகையின் பதவிகளுக்கு 2024.12.31 ஆந் திகதியில் காணப்படும் வெற்றிடங்களுக்கு பொதுச் சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக திறந்த அடிப் படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலின் பந்தி 3.0 இல் குறிப்பிட்டவாறு தகைமைகளை கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.12.19 ஆகும்.

1. 1.1 **ஆட்சேர்ப்பு செய்யப்படும் பதவிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை :**

| *இலக்கம்* | *பதவியின் பெயர்* | *வெற்றிடங் களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 1 | மின்னியல் வல்லுநர் | 01 |
| 2 | குழாய் செப்பனிடு பவர் | 01 |
| 3 | சுற்றுலா பங்களாக்களைப் பராமரிப்பவர் | 02 |

1.2 **பதவிளுக்கான கடமையின் தன்மை :**

| | *அங்கீகரிக் கப்பட்ட பதவியின் பெயர்* | *கடமை* |
|---|---|---|
| 1. | மின்னியல் வல்லுநர் | - மின் குமிழ்கள், மின்சார விசிறி கள் மற்றும் மின்சார உபகரணங் களைத் திருத்ததுல்<br>- மின்சார முறைமைகளை நவீன மயப்படுத்துதல் மின்சார கம்பி களை இடுதல் மற்றும் மின்கம்பிகளுடன் தொடர்பான நடவடிக்கைகள்.<br>- வளிக் குளிராக்கிகளின் கம்பிகள் மற்றும் வளி குளிராக்கிகளைப் நிறுவுதல்.<br>- தொலை பேசிகளை நிறுவுதல்<br>- மின்சார சுற்றுக்களைப் பழுது பார்க்கும் வேலை.<br>- பதவியுடன் தொடர்புடைய தலைமை அலுவலகத்தினால் வழங்கப்படும் வேலைகளை செய்தல். |
| 2. | குழாய் செப்பனிடு பவர் | - தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் குழாய் முறைமையை மற்றும் கழிவு நீரினை அகற்றும் முறை மையைப் பராமரித்தல்<br>- புதிய குழாய்களைப் பொருத்தும் வேலைகள்<br>- துப்பரவாக்கும் உபகரணங்கள் மற்றும் பிற உபகரணங்களைத் திருத்துதல்<br>- பதவியுடன் தொடர்புடைய தலைமை அலுவலகத்தினால் வழங்கப்படும் வேலைகளை செய்தல். |
| 3. | சுற்றுலா பங்களாக் களைப் பராமரிப் பவர் | - தொழில் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மற்றும் ஒருவரின் பாதுகாப்பில் உள்ள சுற்றுலா பங்களாக்கள் மற்றும் அதன் சுற்றாடலினை துப்பர வாகவும் நேர்த்தியாகவும் பேணு தல் மற்றும் பராமரித்தல்.<br>- வருகை தரும் விருந்தினர்களுக்கு அவசியமான வசதிகளை வழங் குதல் மற்றும் சுற்றுலா பங்களாக் களுக்குச் சொந்தமான பொருட் கள், உபகரணங்கள் மற்றும் பிற சொத்துக்களைக் கவன மாகப் பாவித்தல்.<br>- பங்களாக்களுக்குச் சொந்த மான பொருட்கள், உபகரணங் கள் என்பவற்றைப் பாது காக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளுதல்.<br>- வருகை தரும் விருந்தினர் களுக்குத் தேவையான உணவு களைத் தயாரித்தல் அல்லது உணவு தயாரிப்பதற்குத் தேவை யான வசதிகளை அவர்களுக்கு வழங்குதல்.<br>- பதவியுடன் தொடர்புடைய தலைமை அலுவலகத்தினால் வழங்கப்படும் வேலைகளை செய்தல். |

2. **ஆட்சேர்ப்பு திட்டமுறை :**

அடிப்படைத் தகுதிகளை உடைய விண்ணப்பதாரர்கள் வாண்மைத்துவ பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவர்.

அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களிலிருந்து வாண்மைத்துவத் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிலிருந்து அமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவர் என்பதுடன் இருக்கும் வெற்றிடங்களுக்கு ஏற்ப திறமை புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

3. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :**

3.1 **கல்வித் தகைமைகள் :**

க.பொ.த. (சா.த.) பரீட்சையில், ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல்.

3.2 **வாண்மைத்துவ தகைமைகள் :**

| *பதவி* | *வாண்மைத்துவ தகைமைகள்* |
|---|---|
| மின்னியல் வல்லுநர் | மின்னியல் வேலையில் தேசிய தொழிற் கற்கைகள் தகைமைகள் (தே.தொ.த.) மட்டம் 2 அல்லது 3 இற்கும் குறையாத ஒரு பயிற்சி நெறியை பூர்த்தி செய் திருத்தல். |
| குழாய் செப்பனிடுபவர் | குழாய் பொருத்தும் துறை யில் தேசிய தொழிற் கற்கை கள் தகைமைகள் (தே. தொ.த.) மட்டம் 2 அல்லது 3 இற்கும் குறையாத ஒரு பயிற்சி நெறியை பூர்த்தி செய் திருத்தல். |
| சுற்றுலா பங்களாக் களைப் பராமரிப்பவர் | சுற்றுலா பங்களாக்கள் பரா மரித்தல் ஓய்வு விடுதி பரா மரித்தல் அல்லது தோட்டம் பராமரித்தல் அல்லது சமையல் வேலையில் தேசிய தொழிற் கற்கைகள் தகைமைகள் (தே. தொ.த.) மட்டம் 2 அல்லது 3 இற்கும் குறையாத ஒரு பயிற்சி நெறியை பூர்த்தி செய்திருத்தல். |

3.3 **அனுபவம் :**

உரிய துறையில் ஒருவருடகால அனுபவம் இருத்தல் வேண்டும். அதனை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3.4 **உடற்றகைமைகள் :**

நாட்டின் எப்பாகத்திலும் வேலை செய்வதற்குத் தேவையான மற்றும் உரிய பதவிக்கான கடமை களை நிறைவேற்றுவதற்குரிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3.5 **ஏனைய தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த குணநலன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்களைக் கோருகின்ற அறிவித்தலில் குறித்துக்கூறப்படுகின்ற திகதியன்று, குறித்துக் கூறப்படும் எல்லாத் தகைமைகளையும் திருப்திப் படுத்துதல் வேண்டும்.

3.6 **வயதெல்லை:**

விண்ணப்பங்களின் முடிவுத் திகதியன்று ஆகக் குறைந்த வயது 18 இற்குக் குறையாமலும், ஆகக்கூடிய வயது 45 இற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் நிரந்தர பதவி ஒன்றினை வகிப்பவருக்கு ஆகக் கூடிய இவ் வயதெல்லை ஏற்புடையதாகாது.)

4. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இல் PL – 2 - 2025 சம்பளப் பிரிவின் பிரகாரம் இப் பதவிக்கு ரூ. 41,800 -10 x 490 -10 x 540 – 10 x 590 - 12 x 630 ரூ. 65,560 (மாதாந்தம்) என்ற மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம் உரித்தானது.

5. **சேவையில் இணைக்கப்படுவதற்கான நிபந்தனைகள் :**

5.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்தைக் கொண்டதுமாகும். தங்களுக்கு உரித்துடை ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை முடிபுகளுக்கு நீங்கள் உட்படுதல் வேண்டும். விதவைகள் தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் பரிந்துரைக் கப்படும் வகையில் நீங்கள் அதற்குப் பங்களிப்புச் செலுத்த வேண்டும்.

5.2 இப்பதவிக்குச் சேர்க்கப்படும் அலுவலர்களுக்கு மூன்று (03) வருட காலம் தகுதி கூர் காலப் பகுதியாகும் ஆகும்.

5.3 வகுப்பு மூன்றுக்கு III நியமிக்கப்பட்டு 03 வருடங் களுக்குள் முதலாம் தடைதாண்டல் பரீட்சை சித்தி எய்துதல் வேண்டும்.

5.4 2020.10.16 ஆந் திகதிய 2020/18 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக மொழிகள் தொடர்பாக உரிய தேர்ச்சி யைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

5.5 அரசாங்க சேவை நியமனங்களில் ஆளப்படும் பொது நிபந்தனைகள், அரசாங்க சேவைகள்

ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிகள், தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் அவற்றில் ஏற்படுத்தப் படும் மாற்றங்கள் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள், பொதுச் சேவை ஆணைக்குழுவினால் 2013.04.18 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் இதன் பின்னர் அவற்றில் ஏற்படுத்தப்பட உள்ள திருத்தங்கள் ஆகியவற்றுக்கு இந்த நியமனங்கள் உட்பட்டவையாகும்.

6. 6.1 **வாண்மைத்துவ பரீட்சை :**

| *பாடத்திட்டம்* | *அதி கூடிய புள்ளி கள்* | *சித்தி யடை வதற் கான புள்ளி கள்* |
|---|---|---|
| மின்னியல் வல்லுநர்<br><br>- மின் கம்பிகளின் தரக் கொள் ளளவு பெறுமதி<br><br>- மின் சுற்றுக்களை இணைக் கும் போது தரஅளவுகளைத் தீர்மானித்தல்<br><br>- மின்குமிழ்களை இணைத் தல், மின் விசிறிகளை மின் சுற்றுக்கு இணைத்தல், அவற் றினை பிரதான ஆளிக்கு இணைத்தல் மற்றும் உரிய உபகரணங்களுக்கு மற்றும் அதன் பின்னர் அவற்றின் கொள்ளளவினை தீர்மானித் தல்<br><br>- மின் குதைகுழியின் கொள் ளளவின் அடிப்படையில் மின்சார கம்பிகளின் கொள் ளளவினைத் தீர்மானித்தல்.<br><br>- வளி குளிராக்கிகளின் கொள்ளளவின் அடிப்படை யில் மின்கம்பிகளின் கொள் ளளவினைத் தீர்மானித்தல்<br><br>- மின்முறைமையில் பிழை களைக் கண்டுபிடிக்கும் முறை மற்றும் அவற்றினை நீக்கும் முறை<br><br>- மின்சுற்று முறைமையினை புவிக்கு இணைக்கும் முறை, பிழைகளைக் கண்டு பிடிக்கும் முறை மற்றும் அவற்றினை நீக்கும் முறை | 100 | 40% |
| குழாய் செப்பனிடுபவர்<br><br>- T அல்லது L பொருத்துக் களை தயாரித்தல்<br><br>- வால்வுப் பொருத்துக்களைத் தயாரிப்பவர்<br><br>- வடிகுழாய்களை நிறுவுதல்;<br><br>- ஒவ்வொரு வேலைக்கும் தேவையான மூலப் பொருட் கள் மற்றும் விபரங்களின் பட்டியலினை பெற்றுக் கொள்ளல் | | |
| சுற்றுலா பங்களாக்களைப் பரா மரிப்பவர்<br><br>- படுக்கை அறைகளைத் தயாரித்தல்<br><br>- சாப்பாட்டு மேசையை ஒழுங் குபடுத்துதல்<br><br>- நற்பண்புடன் விருந்தினர் களை வரவேற்றல் | | |

6.2 **அமைப்புமுறையான நேர்முகப் பரீட்சை :**

| *புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* | *அதிகூடிய புள்ளிகள்* | *சித்தியடை வதற்கான புள்ளிகள்* |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 25 | பொருத்த மற்றது |
| மேலதிக வாண்மைத்துவ தகைமைகள் | 30 | |
| மேலதிக் தகைமைகள் | 40 | |
| நேர்முகப் பரீட்சைச் செயன்முறை | 05 | |
| மொத்தம் | 100 | |

7. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூ. 250.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் மக்கள் வங்கியின், திம்பிரிகஸ்யாய கிளையில், கணக்கு இல. 086100169026274 இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் பற்றுச் சீட்டு விண்ணப்பத்தில் உறுதியாக ஒட்டுதல் வேண்டும்.

(பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனமானதாகும்.)

**குறிப்பு:** பரீட்சை இரத்துச் செய்யப்பட்டாலன்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தைப் பயன்படுத்தி, A4 (21 x 29) தாழில் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

(அ) கடதாசிகளின் இரு பக்கங்களிலும், 1.0 – 7.0 ஆகியன முதற்பக்கத்திலும், 8.0 – 10 ஆகிய இரண்டாம் பக்கத்திலும், 11 – 14 ஆகியன மூன்றாம் பக்கத்திலும், மீதியாக உள்ளவை மீதமாக உள்ள பக்கத்திலும் வரத்தக்கதாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்திலேயே நிரப்புதல் வேண்டும்.

(ஆ) பரீட்சையின் பெயரானது சிங்கள மொழி யிலான விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழியிலான விண்ணப்பத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்திராத விண்ணப்பப்படிவம் உரிய திகதியில் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்படாத மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித முன்றிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பம் தொலைந்து போதல் உரிய முறையில் நிரப்பப்படாத விண்ணப்பங்கள் என்பவற்றுக்கான பொறுப்பு விண்ணப்பதாரரையே சேரும்.

பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட் சைக்கான அறிவித்தலின் பிரகாரம் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததென விண்ணப்பதாரியால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதால், அவ்வாறு இல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

8.2 விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அடிப்படை ஓரளவு தேர்ச்சியுடைய சேவை வகை ………………… பதவிக்கான விண்ணப்பம் கோரல் – 2025" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.(தயவு செய்து விண்ணப்பிக்கும் பதவியினை இடை வெளியில் குறிப்பிடவும்) தபாலில் தொலைந்து போகும் விண்ணப்பத்திற்கோ அல்லது தாமதமாக கிடைக்கும் விண்ணப்பத்திற்கோ எவ்வித பொறுப்பும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

உரிய முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2025.12.19 ஆம் தியதியோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

தொழில் ஆணையாளர் (நிர்வாகம்)
தொழில் திணைக்களம்,
8 ஆம் தளம்,
“மெஹெவர பியெச” கட்டிடம்
கொழும்பு 05.

8.3 விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், ஒரு பாடசாலை அதிபரால், அல்லது ஒரு சமாதான நீதவானால், அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளரால், அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரால், அல்லது முப்படைகளின் ஆணையிடும் அதிகாரி ஒருவரால், பொதுச் சேவை அல்லது மாகாணப் பொதுச் சேவையில் பதவிநிலை தரத்தின் நிரந்தர அலுவலர் ஒருவரால் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் தலைவர் அல்லது தலைமை பிக்கு ஒருவரினால் அல்லது வேறு புண்ணிய தலத்தில் பொறுப்புடைய தலைவர் ஒருவர் அல்லது வணக்கத்திற்குரிய நிலையில் உள்ள தலைவர் ஒருவரினால் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

9. **பொய்யான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனை :**

சரியான தகவல்களைச் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவம் நிரப்பப்படல் வேண்டும். பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவரெனக் காணப்பட்டால், பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அவரது தகைமை, பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னரோ, அல்லது பரீட்சை எழுதும்போதோ, அல்லது பரீட்சைக்குப் பின்னரோ இரத்துச் செய்யப்பட இடமுண்டு. நியமிப்புச் செய்ததன் பின்னர் பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தமை அல்லது ஏதேனும் தகவலை வேண்டுமென்றே மறைத்தமை தெரியவந்தால் விண்ணப்பதாரி பின்னர் சேவையிலிருந்து பதவிநீக்கத்துக்கு ஆளாக நேரிடும்.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் தொழில் வாண்மைப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சையின் போது, தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந் நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியாகும் வாகன அனுமதிப் பத்திரம்

11. இப்பரீட்சையை நடாத்துதல், பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும் தீர்மானத்தையும், இது தொடர்பான மற்றைய எல்லா விடயங்களையும் பற்றிய தீhமானங்களையும் எடுப்பதற்கான இறுதி அதிகாரம் தொழில் ஆணையாளர் அதிபதிக்கே உள்ளது.

12. இந்த அறிவித்தலில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் ஏதேனும் மாறுபாடுகள் காணப்படின், சிங்கள மொழியிலான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

தொழில் ஆணையாளர் நாயகம்

2025.11.11

மாதிரி விண்ணப்பப் படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**தொழில் திணைக்களம்**

**அடிப்படை ஓரளவு தேர்ச்சியுடைய சேவை வகை பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025**

01. மொழி - பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்:

சிங்களம் - 2 (உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதுக)
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4

பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப் படிவம் நிரப்பப்பட வேண்டும்

02. தனிப்பட்ட விபரங்கள் :

2.1. முதலெழுத்துக்களுடன் பெயர் :
……………………………………………………………………………………………………
(ஆங்கில பெரிய எழுத்தில்) உ-ம்: (PERERA H.A.L.S.)

2.2. முழுப்பெயர் :
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
(ஆங்கில பெரிய எழுத்தில்)

2.3. முழுப் பெயர்:
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
(சிங்களத்தில் / தமிழில்)

03. 3.1. நிரந்தர முகவரி: (ஆங்கில பெரிய எழுத்தில்) (அனுமதி அட்டை இம் முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும்)
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

3.2. நிரந்தர முகவரி: (சிங்களத்தில் / தமிழில்)
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

04. பால் : (ஆண் -0, பெண் -1) ☐

உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதுக

05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. தொலைபேசி /கைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

07. விவாக நிலை : (விவாகமாகாதவர் – 1, விவாகமானவர் -2) ☐

உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதுக

08. 8.1. பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

8.2. 19.12.2025 இல் வயது: வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

09. விண்ணப்பிக்கும் பதவி (உரிய இடத்தில் " ✓ " எனக் குறிப்பிடுக)

| *இல.* | *பதவி* | |
|---|---|---|
| 1 | மின்னியல் வல்லுநர் | |
| 2 | குழாய் செப்பனிடுபவர் | |
| 3 | சுற்றுலா பங்களாக்களைப் பராமரிப்பவர் | |

10. கல்வித் தகைமைகள்:

10.1 க.பொ.த. (சா./த.) பரீட்சை: (முதலாவது தடவை)

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் : ..........................................................................................
(ii) சுட்டிலக்கம் : ..........................................................................................................................
(iii) பெறுபேறுகள் :

| | *பாடம்* | *தரம்* | | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

10.2 க.பொ.த. (சா./த.) பரீட்சை: (இரண்டாவது தடவை)

(i) பரீட்சையின் வருடமும் மாதமும்:.....................
(ii) சுட்டிலக்கம்:.....................
(iii) பெறுபேறுகள் :

| | *பாடம்* | *தரம்* | | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

11. வாண்மைத்துவத் தகைமைகள்:

| *பயிற்சிநெறியின் பெயர்* | *பயிற்சிநெறியின் காலம்* | *தேசிய தொழிற் கற்கைகள் தகைமைகள் (தே.தொ.த.) மட்டம் 2* | *சான்றிதழ் வழங்கிய நிறுவனம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

12. அனுபவம் :

| *வேலை செய்த / பயிற்சி பெற்ற நிறுவனத்தின் பெயர்* | *காலம்* |
|---|---|
| | |

13. குற்றவியல் குற்றச்சாட்டிற்காக எப்போதாவது நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டீர்களா?:
(உரிய கூட்டினுள் ✓ அடையாளத்தை இடவும்)

| ஆம் | | | இல்லை | |
|---|---|---|---|---|

ஆம் எனின், குற்றத்தை குறிப்பிடவும் விபரங்களைத் தருக. எந்த நீதிமன்றினால் குற்றம் சாட்டப்பட்டீர் மற்றும் குற்றத்தின் தன்மை.
……………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………..

14. விண்ணப்பதாரியின் சான்றிதழ்:

(அ) இந்த விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை எனவும் நான் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன். ஏதாவது நிரப்பப்படாது இருந்தமை/ தவறாக நிரப்பப்பட்டமை தொடர்பிலான இழப்பினை ஏற்றுக் கொள்ள நான் சம்மதிக்கின்றேன். மேலும், இந்த விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை எனவும் நான் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

(ஆ) இப்பரீட்சையை நடாத்துவதிலும் இதன் பெறுபேறுகளை வெளியிடுவதிலும் தொழில் ஆணையாளர் அதிபதியால் வழங்கப்படும் விதிமுறைகளுக்கு உட்படுவேன் என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன் என்பதுடன் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரே இந்த நிலமைகளின் கீழ் நான் தகுதியற்றவர் என காணப்பட்டால் நான் எனது தகைமையை இழக்கச் செய்வதற்கு எடுக்கத்தக்க முடிவை ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்கின்றேன்.

(இ) இங்கு என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என உறுதிப்படுத்தப்படின் இந்நியமனத்திற்கு தகுதியற்றவராவேன் எனவும் நியமனத்தின் பின்னரும் கூட உறுதிப்படுத்தப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் நன்கறிவேன்.

(ஈ) இங்கு என்னால் தரப்பட்ட தகவல்களை இதன் பின்னர் எந்தவொரு மாற்றமும் செய்யமாட்டேன்.

………………………………… ……………………………………
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................................................................................................................ (விண்ணப்பதாரியின் முழுப்பெயர்)எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் தனது கையொப்பத்தை என் முன்னிலையில் ........................... ஆம் திகதியன்று இட்டார்.

திகதி:............................ ..............................................................
உறுதிப்படுத்துபவரது கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ பதவி முத்திரை

கையொப்பத் தை உறுதிப்படுத்துபவரது முழுப் பெயர்:....................................................
பதவி:.......................................................
முகவரி :......................................................

11-279

---

## புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

### தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் தொடர்புடைய சேவைகள் வகுதியின் பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்தல் - 2025

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் தொடர்புடைய சேவைகள் வகுதியின் (MN - 4 - 2025) பின்வரும் பதவிகளின் பொருட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையின் விதிகளின் படி திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விண்ணப்பங்கள் கோரும் கடைசித் திகதிக்கு, அதாவது 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி கீழே உள்ள 3.0 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றது.

1.1 **ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ள பதவிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை :**

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வெற்றிடங் களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 01 | நூதனசாலைகள் அத்தியட்சகர் | 05 |
| 02 | பாரம்பரியக் கலை உதவியாளர் | 01 |
| 03 | கண்காட்சித் திட்டமிடல் உத்தியோகத்தர் | 01 |
| 04 | ஆராய்ச்சி உதவியாளர் | 06 |
| 05 | கல்வி மேம்பாட்டு உத்தியோகத்தர் | 09 |
| 06 | பிரதானப் பாதுகாப்பு உத்தியோகத்தர் | 02 |

1.2 **பதவிகளின் கடமைகளின் தன்மை :**

| *அங்கீகரிக்கப் பட்ட பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| நூதன சாலைகள் அத்தியட்சகர் | நூதனசாலைக்குச் சொந்தமான சகல அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் பாதுகாப்புத் தொடர்பான பொறுப்புக்களை வகித்தல் மற்றும் நூதனசாலைக்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலக ஆளணியினரை நிர்வகித்தல், நிதி அலுவல்கள் தொடர்பான பொறுப்புக்களை வகித்தல் மற்றும் பதவிக்குரியதாகத் திணைக்களத் தலைவரால் பொறுப்பளிக்கப்படும் பதவி தொடர்பான ஏனைய கடமைப் பொறுப்புக்கள் |

| *அங்கீகரிக்கப் பட்ட பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| பாரம்பரியக் கலை உதவியாளர் | பண்டைய சித்திரங்கள் பிரதி யெடுத்தல், பாதுகாத்தல், பண் டையக் கலைப் பொருட்கள் படிமமாக்கம் செய்தல், அவற்றைச் சேகரித்தல், மேற்பார்வை மற்றும் பதவி தொடர்பாகத் திணைக்களத் தலைவரால் பொறுப்பளிக்கப்படும் ஏனைய கடமைகள் |
| கண்காட்சித் திட்டமிடல் உத்தியோகத்தர் | கண்காட்சி கூடங்கள் நிர்மாணம், பின்னணிகள் மற்றும் ஒளியமைப்பு வடிவமைத்தல், அரங்குகள் திட்ட மிடல், அதற்குத் தேவையான மதிப்பீடுகள், பொருட்கள் மற்றும் அளவுகளின் பட்டியல்களைத் தயாரித்தல், கண்காட்சிகளைத் திட்ட மிடல் பிரிவிற்குப் பொறுப்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பதவிக்குரியதாகத் திணைக் களத் தலைவரால் பொறுப்பளிக் கப்படும் ஏனைய கடமைகள் |
| ஆராய்ச்சி உதவியாளர் | திணைக்களத்தில் தமது விடயத் திற்குரியதான ஆராய்ச்சி நடவடிக் கைகளின் பொருட்டு தேவையான நூதனப் பொருட்கள், மாதிரிகள் மற்றும் தரவுகள் மேற்பார்வை உத்தியோகத்தர்களின் அனுமதியின் கீழ் சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், கண்காட்சிகளை நடாத்துதல், கருத்தரங்குகள், கலந்துரையாடல் கள், செயலமர்வுகளை பிரதிநிதித்து வப்படுத்துதல் மற்றும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை நிறைவேற்றும் பணிகளின் பொருட்டு ஒத்துழைத்தல் |
| கல்வி மேம்பாட்டு உத்தியோகத்தர் | நூதனசாலைப் பார்வையாளர்களின் பொருட்டு கண்காட்சிச் சேவைகளை வழங்குதல், திணைக்களம் ஏற்பாடு செய்யும் கல்விக் கருத்தரங்குகள், விரிவுரைகள், செயலமர்வுகள் மற்றும் விளம்பர நடவடிக்கைகளை நிறைவேற்றல் மற்றும் நூதனசாலை நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் |
| பிரதானப் பாதுகாப்பு உத்தியோகத்தர் | திணைக்களத்திற்குரிய சகல நூதன சாலைகளினதும் பாதுகாப்பு தொடர் பான நடவடிக்கைகளை நிறை வேற்றல், காவல் சேவையாளர் களை வழிநடத்துதல் ஈடுபடுத்தல் மற்றும் மேற்பார்வை, அவர்களின் பயிற்சிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல், திணைக்களத்தின் இடர் முகாமைத்துவக் குழுவிற்கு ஒத் துழைதல், நவீனப் பாதுகாப்பு முறைகளை நூதனசாலைகளில் தாபித்தலுக்குரியதாக நடவடிக் கைகளை எடுத்தல், நூதனசாலை களின் பாதுகாப்புத் தொடர்பாக உரிய பிரிவுகளுடன் இணைப்பு நடவடிக்கைகள் மற்றும் பதவிக்குரி யதாகத் திணைக்களத் தலைவரால் பொறுப்பளிக்கப்படும் ஏனைய கடமைகள் |

**2.0 சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை :**

திறமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் பெறு பேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

2.1 3.0 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே திறமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக் கப்படும்.

2.2 நூதனசாலையின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைச் சபை யினால் நடாத்தப்படும் திறமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்களில் தொடர் முறைக் கமைய திறமை அடிப்படையில் ஆட் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

3.0 **தகைமைகள் :**

3.1 **கல்வித் தகைமைகள்:**

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|
| நூதனசாலைகள் அத்தியட்சகர் | பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் |
| பாரம்பரியக் கலை உதவியாளர் | பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து நுண்கலை (சித்திரம்) பட்டம் பெற்றிருத்தல் |
| கண்காட்சித் திட்டமிடல் உத்தியோகத்தர் | பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் கட்டிடக்கலை மற்றும் கட்டுமான சூழலியல் பட்டம் பெற்றிருத்தல் |
| ஆராய்ச்சி உதவியாளர் | பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தொடர்புடைய துறையில் பட்டம் பெற்றிருத்தல். வரலாறு அல்லது தொல்லியல் அல்லது மானுடவியல் அல்லது சமூகவியல் அல்லது மானுடவியல் அல்லது விலங்கியல் அல்லது தாவரவியல் அல்லது இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒரு பாடத்தையாவது உள்ளடக்கிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| கல்வி மேம்பாட்டு உத்தியோகத்தர் | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் தொடர்புடைய துறையில் பட்டம் பெற்றிருத்தல். வரலாறு அல்லது தொல்லியல் அல்லது மானுடவியல் அல்லது சமூகவியல் அல்லது மானுடவியல் அல்லது விலங்கியல் அல்லது தாவரவியல் அல்லது இரசாயனவியல் ஆகிய பாடங் களில் ஒரு பாடத்தையாவது உள்ளடக்கிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| பிரதானப் பாதுகாப்பு உத்தியோகத்தர் | பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு வால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் பட்டம் பெற்றிருத்தல் |

3.2 **தொழில்சார் தகைமைகள் :**

பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு இலங்கை மாணவ கடெற் படை யணில் கடெற் உத்தியோகத்தராகப் பயிற்சி பெற்றிருத்தல் அல்லது பாதுகாப்புத் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பாடநெறியைப் பின்பற்றியிருத்தல்.

ஏனைய பதவிகளின் பொருட்டு, தொடர்புடைய துறையில் பெற்றுக் கொண்டுள்ள தொழில்சார் தகைமைகள் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

3.3 **அனுபவம் :**

பாரம்பரியக் கலை உதவியாளர் பதவியின் பொருட்டு, பழைய ஓவியங்களை பிரதியெடுத்தல், அவற்றைப் பாதுகாக்கும் போது மீண்டும் வர்ணம் தீட்டுவது, பழைய கலைப் பொருட்களின் மாதிரிகளைப் படிமமாக்கம் போன்றவை பற்றி சிறந்த அனுபவம் பெற்றிருத்தல்.

ஏனைய பதவிகளின் பொருட்டு, தொடர்புடைய துறையில் பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்கள் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

3.4 **உடல் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, போது மானளவில் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு, 5 ' 5 " (165.10 செ.மீ.) அல்லது அதற்குக் கூடிய உயரமும், மார்பளவு 32" (157.48 செ.மீ.) அல்லது அதற்குக் கூடிய, இலங்கை ஆண் நபராகவிருத்தல் வேண்டும்.

3.5 **ஏனைய தகைமைகள்:**

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக விருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

III. சேவைக்கு ஆட்சேர்ப்பின் பொருட்டான திறமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றும் பொருட்டு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுவது, விண்ணப்பதாரர் உரிய சகல தகைமைகள் மற்றும் விதித்துரைக்கப்பட்டுள்ள வயது எல்லை என்பன விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல வகையிலும் பூரணப்படுத்தியிருந்தால் மட்டுமேயாகும்.

4.0 **வயது :**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் ஆகக் குறைந்தது 21 வயதுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன், ஆகக் கூடிய வயது 35 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

5.0 **சேவையில் சேர்த்துக் கொள்ளும் நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

5.1 இப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடைய துமாகும். விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / விதவைகள் தாபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப் புப் பணம் செலுத்துதல் வேண்டும். இருப்பினும், அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் உட்படல் வேண்டும்.

5.2 இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

5.3 III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையதல் வேண்டும்.

5.4 அரச கரும மொழிக் கொள்கைக்குரிய 16.10.2020 ஆந் திகதிய 18/2020 என்னும் இலக்கமுடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைய, அரச கரும மொழித் தேர்ச்சியை விதித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5.5 அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகளுக்கும் இந்நியமனம் உட்பட்ட தாகும்.

6.0 **சம்பள அளவுத்திட்டம் :**

இப் பதவியின் பொருட்டு, பொது நிர்வாகச் 10/2025, என்னும் இலக்கமுடைய சுற்றறிக்கையில் MN - 4 - 2025 இன் படி, ரூபா 53,060 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1320 - 5 x 1350 - ரூபா 94,100 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டம் உரித்தாகும். இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின் படி, நியமனம் செயற்படுத்தப்படும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப் படும்.

7.0 **திறமை மதிப்பீடும் நேர்முகப் பரீட்சையும் :**

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் தொடர் புடைய சேவைகள் வகுதியின் (MN-4-2025 ) பதவியின் பொருட்டான தகைமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் நடைமுறையின் படி புள்ளிகள் வழங்கல் மேற்கொள்ளப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | *சித்திக் கான புள்ளி களின் அளவு* |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித் தகைமைகள் | 15 | பொருத்த மற்றது |
| 2. தொழில்சார் தகைமைகள் | 15 | |
| 3. மொழிப் புலமை | 15 | |
| 4. கணினி அறிவு | 20 | |
| 5. பயிற்சி மற்றும் அனுபவங்கள் | 30 | |
| 6. நேர்முகப் பரீட்சையின் போது எடுத்துக் காட்டும் திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

** குறிப்பு :

திறமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்குக் கலந்து கொள்ளல் நியமனம் வழங்குவதற்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருத்திற் கொள்ளப்படாது.

8.0 **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, 21x29 செ.மீ. (A4) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, தாமாகவே விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும்.

8.2 விதித்துரைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்காத மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப் படாதுள்ள மற்றும் முழுமையற்ற நிலையில் உள்ள விண்ணப்பங்கள் எவ்விதமான அறிவித்தல்களும் இல்லாது நிராகரிக்கப்படும்.

8.3 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதாக அறிவிக் கப்படமாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் குறித்து விடுக்கப்படும் எவ்வித மான முறைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

8.4 திறமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைப்பு விடுக்கப்படுவது, விண்ணப்ப தாரர் இப் பதவியின் பொருட்டு தகைமைகளைக் கொண்டுள்ளதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

8.5 விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் பதவிக்கமையத் "தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் தொடர்புடைய சேவைகள் வகுதியின் ............. பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2025 எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

8.6 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிஸ், முப்படையின் அதிகார மளிக்கப்பட்ட உத்தியோகத்தர், பொலிஸ் சேவை யில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 06/2006 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் தரப்படுத் தலின் படி, மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டத்தின் அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத் தப்பட்டிருத்தல் வேண்டும்.

8.7 இவ்வெற்றிடங்களை நிரப்புதல், நிரப்பாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் ஒரு பகுதியை நிரப்புதல் மற்றும் ஏனைய சகல விடயங்கள் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித் தானதாகும்.

**9.0 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்,
இலக்கம். 53,
சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை,
கொழும்பு - 07.

**10.0 திறமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பொருட்டு தோற்றுதல் :**

சகல முறையிலும் முழுமையான விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள மற்றும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தமைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே, திறமை மதிப்பீடும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும். அழைப்புக் கடிதத்தைச் சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்திக்கும் திறமை மதிப்பீடும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழக்கப்படமாட்டாது.

**11.0 பரீட்சார்த்தியின் ஆளடையாளம்:**

திறமை மதிப்பீடும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில், நேர்முகப் பரீட்சை சபை திருப்தியடையும் விதத்தில் விண்ணப்பதாரர்கள், தங்கள் ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**12.0 தவறான தகவல்களை வழங்குதலின் பொருட்டான தண்டனை:**

பரீட்சார்த்தி ஒருவர் இத்திறமை மதிப்பீடும் நேர்முகப் பரீட்சையின் பொருட்டு தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், நேர்முகப்பரீட்சை நடை பெறுவதற்கு முன்னர் அல்லது நேர்முகப் பரீட்சை யின் போது அல்லது நேர்முகப் பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத் தன்மை இரத்துச் செய்யப்படலாம்.

பரீட்சார்த்தி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனு மொரு தகவல்கள் தவறானது எனத் தெரிந்தும் சமர்ப்பித்திருப்பது தெரிய வந்தால், அல்லது ஏதேனும் முக்கியமான தகவல்களை வேண்டுமென்றே மறைத் திருந்தால், அவர் பணியிலிருந்து நீக்கப்படலாம்.

13.0 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் தொடர்புடைய சேவைகள் வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை விதி மற்றும் அவற்றில் மேற்கொள்ளப் பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப் பதவியின் பொருட்டு ஏற்புடையதாகும்.

14.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் வெளியிடப்பட்டுள்ள இவ்அறிவித்தலின் மொழி உரைகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது முரண்பாடு இருப்பதாகத் தோன்றினால், அத்தகைய சந்தர்ப்பத்தில், சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15.0 இந்நிபந்தனைகளில் குறிப்பிடப்படாதுள்ள விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மூலம் தீர்மானிக்கப்படும் .

சனுஜா கஸ்தூரிஆரச்சி,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்.

2025, நவெம்பர் 12.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் தொடர்புடைய சேவைகள் வகுதியின் ............................................ பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்தல் - 2025**

(அலுவலக பாவனையின் பொருட்டு மட்டும்)

1.0

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :
(முதலெழுத்துக்களை இறுதியில் எழுதி ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)
உதா. : PERERA A.B.C.
..................................................................................................................................

1.2 முழுப் பெயர் : ( ஆங்கில கெப்பிடல் எழுதுக்களில்)
..................................................................................................................................

1.3 முழுப் பெயர் : ( சிங்களத்தில் / தமிழில் )
..................................................................................................................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

1.5 பிறந்த திகதி :
ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

1.6 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:
வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

1.7 பாலினம் : ( ஆண் - M , பெண் - F ) ☐

1.8 சிவில் அந்தஸ்து : திருமணமானவர் : ☐ திருமணமாகாதவர் : ☐
( ✓ குறியீட்டைப் பாவிக்கவும்)

2.0 நிரந்தர முகவரி :

2.1 ஆங்கில கெப்பிடல் எழுதுக்களில்:
..................................................................................................................................
..................................................................................................................................

2.2 சிங்களத்தில் / தமிழில்:
..................................................................................................................................
..................................................................................................................................

2.3 அழைப்புக் கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி : .
..................................................................................................................................
..................................................................................................................................

3.0 நிரந்தர குடியிருப்பாளர் வதிவிடத்திற்குரிய :

3.1 மாகாண சபை : ..................................................................................................................
3.2 மாவட்டம் : ......................................................................................................................

4.0 தொலைபேசி இலக்கம்:

நிலையான [ ] கையடக்க [ ]

5.0 கல்வித் தகைமைகள்:

| *சித்தியடைந்துள்ள பட்டம் / பட்டப் பின் படிப்பு தகைமைகள்* | *வகுப்பு* | *பல்கலைக்கழகம்* | *பட்டப்படிப்பை பூர்த்தி செய்த திகதி* |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

(கல்வித் தகைமைகளை நிரூபிப்பதற்கு உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்)

6.0 தொழில்சார் தகைமைகள்:

| *பின்பற்றிய பாடநெறிகள்* | *நிறுவனம்* | *பெற்றுக் கொண்டுள்ள தொழில்சார் மட்டம்* | *பாடநெறியைப் பூர்த்தி செய்த திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

7.0 அனுபவம் :

| *சேவை நிலையம்* | *பதவி* | *சேவைக் காலம்* | |
|---|---|---|---|
| | | *தொடக்கம்* | *வரை* |
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |

8.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டின் பொருட்டு நீதிமன்றத்தால் குற்றவாளியாகப்பட்டிருக்கிறீர்களா?

( ✓ குறியீட்டைப் பாவிக்கவும்)

ஆம் [ ] இல்லை [ ]

8.1 " ஆம் " எனில் , விவரங்களைக் குறிப்பிடவும்: ..................................................................................................................
..................................................................................................................................................................

9.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியுரைக்கின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இக் கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நான் சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு தகுதியற்றவன் எனவும் நியமனம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அவ்வாறு நிரூபிக்கப்பட்டால், சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் திறமையை மதிப்பீடும் நேர்முகப் பரீட்சை நடாத்துவது தொடர்பாகத் தேசிய நூதனசாலைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் இணங்கியொழுகுவதாகவும் உறுதியுரைகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

.................................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி : ...................................................

10. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .............................................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் .................................... ஆந் திகதி என் முன்னிலையில் மேற்படி 9.0 பந்தியின் கீழ் கையொப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................................
உறுதிப்படுத்துவரின் கையொப்பம்

திகதி : ...................................................
உறுதிப்படுத்துவரின் பெயர் : ..............................................................
பதவி : ..........................................................................................
முகவரி : .......................................................................................
( பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும் )

11-289/1

---

## புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

### தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் கனிஷ்ட (தொழில்நுட்பம் அல்லாத) சேவைகள் வகுதியின் பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்பு - 2025

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் கனிஷ்ட (தொழில் நுட்பம் அல்லாத) சேவைகள் வகுதியின் (PL - 1 - 2025) பின்வரும் பதவிகளின் பொருட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையின் விதிகளின் படி திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விண்ணப்பங்கள் கோரும் கடைசித் திகதிக்கு, அதாவது 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு கீழே உள்ள 3.0 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

**1.1 ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கும் பதவிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை :**

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வெற்றிடங் களின் எண் ணிக்கை* |
|---|---|---|
| 01. | நூதனசாலைக் காவலாளி | 10 |
| 02. | உதவிக் காவல் பரிசோதகர் | 01 |

**1.2 பதவிகளின் கடமைகளின் தன்மை :**

| *அங்கீகரிக்கப் பட்ட பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| நூதனசாலைக் காவலாளி | நூதனசாலையின் பாதுகாப்பு தொடர்பாகப் பொறுப்பு வகித்தல் மற்றும் நிறுவனத் தலைவரால் கையளிக்கப்படும் ஏனைய கடமைகள் |

| *அங்கீகரிக்கப் பட்ட பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| உதவிக் காவல் பரிசோதகர் | இரவு நேரங்களில் நூதன சாலையில் பணி புரியும் காவலர்களை முறையாக உரிய இடங்களில் நிறுத்துதல் மற்றும் அவர்களின் கடமைகளின் மேற்பார்வை மற்றும் நிறுவனத் தலைவரால் கையளிக்கப்படும் ஏனைய கடமைகள். |

2.0 **ஆட்சேர்ப்பு முறை :**

திறமையை மதிப்பிடும் பிரயோகப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

2.1 3.0 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே திறமையை மதிப்பிடும் பிரயோகப் பரீட்சையின் பொருட்டு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2 நூதனசாலையின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் திறமையை மதிப்பிடும் பிரயோகப் பரீட்சையில் மற்றும் நேர்முகப் பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்றுக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து திறமையின் தொடர்முறையின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

3.0 **தகைமைகள் :**

3.1 **கல்வித் தகைமைகள் :**

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|
| நூதனசாலைக் காவலாளி | கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |
| உதவிக் காவல் பரிசோதகர் | கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். |

3. 2 **உடல் தகைமைகள் :**

சகல பரீட்சார்த்திகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, போதுமானளவில் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும் .

நூதனசாலைக் காவலாளி மற்றும் உதவிக் காவல் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு உயரம், 5' 5 " ( 165.10 செ.மீ) அல்லது அதற்குக் கூடிய மற்றும் மார்பளவு 32" ( 157.48 செ.மீ ) அல்லது அதற்குக் கூடிய இலங்கை ஆண் நபராக விருத்தல் வேண்டும் .

3.3 **ஏனைய தகைமைகள்:**

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
III. சேவைக்கு ஆட்சேர்ப்பின் பொருட்டான திறமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றும் பொருட்டு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுவது, விண்ணப்பதாரர் உரிய சகல தகைமைகள் மற்றும் விதித்துரைக்கப்பட்டுள்ள வயது எல்லை என்பன விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல வகையிலும் பூரணப்படுத்தியிருந்தால் மட்டுமேயாகும்.

4.0 **வயது :**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் ஆகக் குறைந்தது 18 வயதுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன், ஆகக் கூடிய வயது 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

5.0 **சேவையில் சேர்த்துக் கொள்ளும் நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

5.1 இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையதுமாகும். விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / விதவைகள் தாபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும். இருப்பினும், அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் உட்படல் வேண்டும்.

5.2 இந்த நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

5.3 III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடையதல் வேண்டும் .

5.4 அரச கரும மொழிக் கொள்கைக்குரிய 16.10.2020 ஆந் திகதிய 18/2020 என்னும் இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமைய, அரச கரும மொழித் தேர்ச்சியை விதித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5.5 அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தின் கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

6.0 **சம்பள அளவு :**

இப் பதவியின் பொருட்டு, பொது நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025, என்னும் இலக்கமுடைய சுற்றறிக்கையில், PL-1-2025 இற்கமைய, ரூபா 40,000 -10 x 450 - 10 x 490 - 10 x 540 -12 x 590 - ரூபா 61,880 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டம் உரித்தாகும். இச்சுற்றறிக்கையின் உப அட்டவணை II இன் ஏற்பாடுகளின் படி, நியமனம் செயற்படுத்தப்படும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப் படும்.

7.0 திறமையை மதிப்பிடும் பிரயோகப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை:

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் தொடர் புடைய சேவைகள் வகுதியின் (PL-1-2025) பதவியின் பொருட்டான தகுதியை மதிப்பிடும் பிரயோகப் பரீட்சையின் போதும் மற்றும் நேர்முகப் பரீட்சையின் போதும் பின்வரும் நடைமுறையின் படி புள்ளிகள் வழங்கல் மேற்கொள்ளப்படும்.

| *பரீட்சித்துப் பார்க்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | *சித்திக்கான புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 1. பிரயோகப் பரீட்சை பிரயோகப் பரீட்சை நூதன சாலையின் கடமைகள் தொடர்பாக வழங்கப் படும் மேடையில் எளிமை யான பிரயோகச் செயற் பாடுகளைக் கொண்ட தாகும். | 60 | பொருத்த மற்றது |
| 2. பதவிக்கு உரித்தான துறைக்குரியதாக அரசாங் கத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்ட துறையுடன் தொடர் புபடுத்தக் கூடிய முறையில் பின் பற்றிய பாடநெறி அல்லது பொருத்தமான வேலைத்திட்டங்கள். | 15 | பொருத்த மற்றது |
| 3. விளையாட்டு மற்றும் வெளிச்செயற்பாடுகள் | 20 | |
| 4. நேர்முகப் பரீட்சையின் போது, பிரதிபலிக்கும் மனப்பாங்கு மற்றும் ஆளு மையின் பொருட்டு | 05 | |
| மொத்தம் | 100 | |

** குறிப்பு :

விண்ணப்பதாரர்களில் திறமையை மதிப்பிடும் பிரயோகப் பரீடசையின் போதும் மற்றும் நேர்முகப் பரீட்சையின் போதும் எடுத்துக் காட்டும் திறைமை தொடர் முறையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

8.0 **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, 21 x 29 செ.மீ (A4) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, தாமாகவே விண்ணப்பப் படிவத்தை தயாரித்தல் வேண்டும்.

8.2 விதித்துரைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்காத மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப் படாதுள்ள மற்றும் முழுமையற்ற நிலையில் உள்ள விண்ணப்பங்கள் எவ்விதமான அறிவித்தல்களும் இல்லாது நிராகரிக்கப்படும்.

8.3 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக அறிவிக் கப்படமாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் குறித்து விடுக்கப்படும் எவ் விதமான முறைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப் படமாட்டாது.

8.4 திறமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைப்பு விடுக்கப்படுவது, விண்ணப்ப தாரர் இப் பதவியின் பொருட்டு தகைமையைக் கொண்டுள்ளதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

8.5 விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் பதவிக்கமையத் “தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கனிஷ்ட (தொழில்நுட்பம் அல்லாத) வகுதியின் ………… பதவிக்கு ஆட்சேர்ப்பு எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

8.6 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிஸ், முப்படையின் அதிகாரமளிக்கப்பட உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 06/2006 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் தரப்படுத்தலின் படி, மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டத்தின் அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் ஒரு உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

8.7 இவ்வெற்றிடங்களை நிரப்புதல், நிரப்பாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் ஒரு பகுதியை நிரப்புதல் மற்றும் ஏனைய சகல விடயங்கள் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தானதாகும்.

**9.0 விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் :**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்,
இலக்கம். 53,
சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை,
கொழும்பு - 07.

**10.0 திறமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பொருட்டு தோற்றுதல் :**

சகல முறையிலும் முழுமையான விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள மற்றும் அறிவித்ததில் குறிப்பிடப்பட்டுள்ள தமைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே, திறமை மதிப்பீடும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

அழைப்புக் கடிதத்தைச் சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்திக்கும் திறமை மதிப்பீடும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழக்கப் படமாட்டாது.

**11.0 பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

திறமை மதிப்பீடு பிரயோகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில், நேர்முகப் பரீட்சை சபை திருப்தியடையும் விதத்தில் விண்ணப்பதாரர்கள், தங்கள் ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**12.0 தவறான தகவல்களை வழங்குதலின் பொருட்டான தண்டனை :**

பரீட்சார்த்தி ஒருவர் இத்திறமை மதிப்பீடும் பிரயோகப் பரீட்சையின் பொருட்டு தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், நேர்முகப் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் அல்லது நேர்முகப்பரீட்சையின் போது அல்லது நேர்முகப் பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படலாம்.

பரீட்சார்த்தி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தவறான தகவல்கள் தவறானது எனத் தெரிந்தும் சமர்ப்பித்திருப்பது தெரியவந்தால், அல்லது ஏதேனும் முக்கியமான தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருந்தால், அவர் பணியிலிருந்து நீக்கப்படலாம்.

13.0 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் தொடர்புடைய சேவைகள் வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை விதி மற்றும் அவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப் பதவியின் பொருட்டு ஏற்புடையதாகும்.

14.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் வெளியிடப்பட்டுள்ள இவ்அறிவித்தலின் மொழி உரைகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது முரண்பாடு இருப்பதாகத் தோன்றினால், அத்தகைய சந்தர்ப்பத்தில், சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15.0 இந்நிபந்தனைகளில் குறிப்பிடப்படாதுள்ள விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மூலம் தீர்மானிக்கப்படும் .

சனுஜா கஸ்தூரிஆரச்சி,
பணிப்பாளர் நாயகம்.

தேசிய நூதனசாலைகள் திணைக்களம்,
2025, நவெம்பர் 12.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் கனிஷ்ட (தொழில்நுட்பம் அல்லாத) சேவைகள் வகுதியின்**
**............................................... பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்பு - 2025**

(அலுவலக பாவனையின்பொருட்டு மட்டும்)

1.0

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :
(முதலெழுத்துக்களை இறுதியில் எழுதி ஆங்கில கெப்பிடல் எழுதுக்களில்)
உதா. : PERERA A.B.C.
..............................................................................................................................................

1.2 முழுப்பெயர் : ( ஆங்கில கெப்பிடல் எழுதுக்களில்)
..............................................................................................................................................

1.3 முழுப்பெயர் : ( சிங்களத்தில் / தமிழில் )
.....................................................................................................................................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

1.5 பிறந்த திகதி :
ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

1.6 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:
வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

1.7 பாலினம் : ( ஆண் - M , பெண் - F ) [ ]

1.8 சிவில் அந்தஸ்து : திருமணமானவர் : [ ] திருமணமாகாதவர் : [ ]
( ✓ குறியீட்டைப் பாவிக்கவும்)

2.0 நிரந்தர முகவரி :

2.1 ஆங்கில கெப்பிடல் எழுதுக்களில்:
.........................................................................................................................................................................
.....................................................................................................................................................................

2.2 சிங்களத்தில் / தமிழில்:
.........................................................................................................................................................................
.....................................................................................................................................................................

2.3 அழைப்புக் கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி : .
.........................................................................................................................................................................
.....................................................................................................................................................................

3.0 நிரந்தர வதிவிடத்திற்குரிய :

3.1 மாகாணம் : ..............................................................................................................................................

3.2 மாவட்டம் : ..................................................................................................................................................

4.0 தொலைபேசி இலக்கம்:

நிலையான [ ] கையடக்க [ ]

5.0 கல்வித் தகைமைகள்:

1. கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)

ஆண்டு: .................................................... பரீட்சை இலக்கம் : ...................................

| *சித்தி பெற்ற பாடங்கள்* | *பெற்றுக் கொண்டுள்ள தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

2. கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)

ஆண்டு: .................................................... பரீட்சை இலக்கம் : ...................................

| *சித்தி பெற்ற பாடங்கள்* | *பெற்றுக் கொண்டுள்ள தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(கல்வித் தகைமைகளை நிரூபிப்பதற்கு உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்)

6.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டின் பொருட்டு நீதிமன்றத்தால் குற்றவாளியாகப்பட்டிருக்கிறீர்களா?

( ✓ குறியீட்டைப் பாவிக்கவும்)

ஆம் : ☐ இல்லை : ☐

6.1 " ஆம் " எனில், விவரங்களைக் குறிப்பிடவும்:

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

7.0 விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியுரைக்கின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இக் கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நான் சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு தகுதியற்றவன் எனவும் நியமனம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அவ்வாறு நிரூபிக்கப்பட்டால், சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் திறமை மதிப்பீடு நேர்முகப் பரீட்சை நடாத்துவது தொடர்பாகத் தேசிய நூதனசாலைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் இணங்கியொழுகுவதாகவும் உறுதியுரைகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

..................................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி : ....................................................

8.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .............................................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் .................................... ஆந் திகதி என் முன்னிலையில் மேற்படி 7.0 பந்தியின் கீழ் கையொப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

திகதி : ....................................................

உறுதிப்படுத்துவரின் பெயர் : ..............................................................

பதவி : ..........................................................................................

முகவரி : .......................................................................................

( பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும் )

11-289/2

---

**நீதிச்சேவை ஆணைக்குழு**

**இலங்கை நீதிச் சேவையில் நிலவும் வெற்றிடங்கள்**

இலங்கை நீதிச் சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்குரிய (நீதிவான்) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்கள், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 12.12.2025 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரியின் முகவரி தெளிவாக குறிப்பிடப்பட்ட ரூபா 110.00 பெறுமதியுடைய முத்திரையிடப்பட்ட தபால் உறை (பதிவுத்தபாலில் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவதற்காக) ஒன்றினை விண்ணப்பத்துடன் சமரப்பிக்க வேண்டும்.

02. **சம்பள அளவுத்திட்டம் :** ரூ. 131,300.00 – 10 x 2,940 – ரூ. 160,700.00 (இச்சம்பள அளவானது முகாமைத்துவ சேவை சுற்றுநிரூபம் 03/2025 அமைவாக) சம்பளத்திற்கு

மேலதிகமாக நீதிமன்ற அதிகாரிகளுக்குரிய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

03. **சகல விண்ணப்பதாரிகளும் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நன்நடத்தை தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) இலங்கையில் அனைத்து பாகங்களிலிலும் சேவையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. **தகைமைகள் :**

(அ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னதாக மூன்று வருடங்களுக்கு குறையாத காலம் செயற்பாட்டு ரீதியிலான வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னதாக வழக்கறிஞராக சத்தியப்பிரமானம் பெற்று மூன்று வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தை கொண்ட உயர் நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தராக சேவையில் ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும். அல்லது

(இ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரசாங்க திணைக்களம் ஒன்றில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றில் அல்லது வேறு அரசாங்க நிறுவனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக மூன்று வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட வழக்கறிஞராக இருப்பதுடன் அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தின் முன் தோன்றியிருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னதாக ஏதேனுமொரு கம்பனியில் அல்லது வங்கியில் அல்லது நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக மூன்று வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்டவராகவும் அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் தோன்றியிருத்தல் வேண்டும்.

குறிப்பு : மேலே (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள "மூன்று வருடங்களுக்கு குறையாத" சேவைக் காலம்/ செயற்பாட்டு ரீதியான தொழில் வண்மை காலத்தை கணக்கிடும்போது, மேலே (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிப்பிடப்படும் சேவைக் காலம்/ செயற்பாட்டு ரீதியான தொழில் வாண்மைக் காலம் என்பன கூட்டாக கருத்தில் கொள்ளப்படும்.

05. விண்ணப்பதாரிகள் நடைபெறவிருக்கும் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகத்தேர்வுகளுக்கு அழைக்கப்படுவார்கள்.

குறிப்பு :

(i) விண்ணப்பப்படிவக் கட்டணமான 15,000.00 ரூபாவினை மக்கள் வங்கியின் டாம் வீதிக் கிளையில் பேணப்பட்டு வரும் 297100199025039 என்ற இலக்கத்தை உடைய "செயலாளர், நீதிச் சேவை ஆணைக்குழு" எனும் கணக்கில் இடும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் பணம் செலுத்தி பெற்றுக் கொண்ட வைப்புச் சீட்டினை பதிவுத் தபாலினூடாகவோ அல்லது நேரில் அலுவலகத்திற்கு வந்து சமர்ப்பிப்பதன் மூலமாகவோ விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ளலாம். பணம் செலுத்துவதற்காக வைப்புச்சீட்டினை நிரப்பும் போது வைப்புச் சீட்டின் உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர், முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் போன்றவற்றை பதிவுத் தபாலினூடாகவோ அல்லது அலுவலகத்திற்கு நேரில் சமுகமளித்தோ மேற்கொள்ளமுடியும்.

(iii) அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்வதற்கும் சமர்ப்பிப்பதற்குமான முகவரி :

செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு,
நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12.

பிரசன்ன அல்விஸ்,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2025, நவெம்பர் 13.

11-313

## திருத்தம்

### இலங்கை நிரந்தர விமானப் படையில் பயிலிளவல் ஆண்/ பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்

2024 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 2408 இன் பகுதி I : தொகுதி (IIஅ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவில் காணப்படும் வெற்றிடங்கள் பின்வருமாறு திருததப்பட்டுள்ளது. மற்றும் துறைக்கான தகைமைகள் மற்றும் தகவல்களில் எவ்வித மாற்றமும் இல்லை என அறிவிக்கப்படுகின்றது.

**நீக்கம்**

**பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவு (ஆண்)**

குறைந்தபட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தி அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல் பிரிவில் (பௌதீக விஞ்ஞானம் ஒரு கட்டாய பாடம்) அல்லது தொழில்நுட்ப பிரிவில் (தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் கட்டாய பாடம்) ஆகியவற்றில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**சேர்ப்பு**

**பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவு (ஆண்/பெண்)**

குறைந்தபட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தி அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல் பிரிவில் (பௌதீக விஞ்ஞானம் ஒரு கட்டாய பாடம்) அல்லது தொழில்நுட்ப பிரிவில் (தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் கட்டாய பாடம்) ஆகியவற்றில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

### இலங்கை விமானப் படையில் பயிலிளவல் அலுவலர் வெற்றிடங்கள் நேரடி அரசாணையமர்வு

2024 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 2408 இன் பகுதி I : தொகுதி (IIஅ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு மற்றும் மருத்துவ பிரிவில் காணப்படும் வெற்றிடங்கள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது மற்றும் துறைக்கான தகைமைகள் மற்றும் தகவல்களில் எவ்வித மாற்றமும் இல்லை என அறிவிக்கப்படுகின்றது.

**நீக்கம்**

**தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு**

**மென்பொருள் பொறியியலாளர் - ஆண்/பெண் (நிரந்தர)**

கணினி அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பொறியியல் இளங்கலை பட்டம் அல்லது கணினி அல்லது தகவல் தொழில்நுட்பத்தின் இளங்கலை பட்டம் அல்லது கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமாக உள்ளடக்கப்பட்ட பௌதிக விஞ்ஞான இளங்கலை பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDIT) அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா இருத்தல் வேண்டும். IESL நிலையத்தில் அல்லது British Computer Systems நிலையத்தில் அல்லது Australian Computer Systems நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் வேண்டும். தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது data networks or server systems அனுபவம் குறிப்பிட்ட துறையில் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும். Java, C# or C/C++, enterprise technologies (Web services, APIs, XML, JSON, SSO, JMS), cloud technologies and container technologies (AWS, XML, JSON, SSO, JMS) coloud technologies and container technologies (AWS, Azure and Docker), micro services, enterprise integration Data Base Administration, DevOps and API management அறிவு மற்றும் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

**சேர்ப்பு**

**தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு**

**மென்பொருள் பொறியியலாளர் - ஆண்/பெண் (நிரந்தர/ தொண்டர் - சீருடை வகை மற்றும் சீருடை அல்லாத வகை)**

கணினி அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பொறியியல் இளங்கலை பட்டம் அல்லது கணினி அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் இளங்கலை பட்டம் அல்லது கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமாக உள்ளடக்கப்பட்ட பௌதிக விஞ்ஞான இளங்கலை பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDIT) அல்லது இருத்தல் வேண்டும். IESL நிலையத்தில் அல்லது British Computer Systems நிலையத்தில் அல்லது Australian Computer Systems நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் வேண்டும். தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது data networks or server systems அனுபவம் குறிப்பிட்ட துறையில் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும் Java, C# or C/ C++, enterprise technologies (such as Web services, APIs, XML, JSON, Flutter, Node JS, MVC5), cloud technologies and container technologies (Such as AWS, Azure and Docker), micro services, enterprise integration, Data Base Administration, DevOps and API management அறிவு மற்றும் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

**நீக்கம்**

**மருத்துவ பிரிவு**

**ஆலோசகர் பொது மருத்துவ நிபுணர் - ஆண்/பெண் (தொண்டர்)**

(அ) பொது மருத்துவ துறையில் MD முதுகலை பட்டம்.
(ஆ) வாரிய சான்றளிக்கப்பட்ட ஆலோசகராக இலங்கை மருத்துவ கவுன்சில் (SLMC) பதிவு

**சேர்ப்பு**

**மருத்துவ பிரிவு**

**ஆலோசகர் பொது மருத்துவ நிபுணர் - ஆண்/பெண் (சீருடை அற்ற - தொண்டர்)**

(அ) பொது மருத்துவ துறையில் MD முதுகலை பட்டம்.
(ஆ) வாரிய சான்றளிக்கப்பட்ட ஆலோசகராக இலங்கை மருத்துவ கவுன்சில் (SLMC) பதிவு

விபீ எதிரிசிங்க,
WWV, RWP, RSP and three Bars, USP, fndu (China), psc, qhi
எயார் மார்ஷல்,
விமானப்படை தளபதி.

11-374

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

**இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கில மொழிப் பரீட்சை 2025 (2026)**

இல. 1885/31 மற்றும் 2014.10.22 ஆம் திகதியிடப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில மொழிப் பரீட்சை 2025 மாச்சு மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என இதன் மூலம் அறியத்தரப்படுகின்றது.

விண்ணப்பப் படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் "எமது சேவைகள்" என்பதன் கீழ் உள்ள "நிகழ்நிலை விண்ணப்பப் படிவங்கள் (ஆட்சேர்ப்பு/ வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள்)" இல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலை (Online) மூலமாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் 2025, நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்குத் ஆரம்பிக்கப்படுவதுடன், 2025, திசெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப. 09.00 மணிக்கு நிறைவடையும். விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த பின்னர், அதனைப் பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியில் உரிய பகுதிகளை கையெழுத்தில் பூரணப்படுத்தி விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் உறுதிப்படுத்தி, உரிய நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்துகையுடன் விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறும் வகையில் பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிப்பதனை இறுதித் திகதி வரை தாமதிப்பதனால் ஏற்படும் எந்தவொரு பாதகமான நிலைமையினையும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

02. அதிபர் சேவையின் ஒவ்வொரு உத்தியோகத்தரும் ஆட்சேர்ப்புத் தினத்திலிருந்து (03) வருடங்களுக்குள் இணைப்பு மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற வேண்டும். அதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இல. 8/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் இந்தப் பரீட்சையில் சித்தியடையும் தேவையிலிருந்து விலக்களிக்கப்பட முடியும். அவ்வாறு இல்லாத ஏனைய உத்தியோகத்தர்கள் இந்தப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

03. இந்தப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் மற்றும் ஏனைய விதிமுறைகள் இல. 1885/31 மற்றும் 2014.10.22 ஆம் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில்

பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழிப் பரீட்சை ஒரு வினாத்தாளைக் கொண்டிருப்பதுடன், விண்ணப்ப தாரர்களின் வசதிக்காக அந்தப் பாடத்திட்டமும் ஏனைய விதிமுறைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) பரீட்சை நடைமுறை – பாடத் திட்டம் கீழ்வருமாறு.

(1) பொது ஆங்கிலம் (General English)
100 புள்ளிகள் – காலம் 03 மணித்தியாலங்கள்

பாடத்திட்டம்

Suitable level of proficiency on the following forms of grammar in the written language is expected from the candidate:-

- Tenses and Numbers
- Sentences (Simple/Compound/Complex/Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

The knowledge on the modern formats and styles of writing is tested in following area of study:-

- Summary writing
- Report writing
- Essay writing

04. சித்தியடைவதற்காக இந்தப் பாடத்தில் ஒரு பரீட்சார்த்தி ஆகக் குறைந்தது 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற வேண்டும்.

4.1. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்ப தாரர்களினதும் பெறுபேறுகளை உள்ளடக்கிய பெறுபேற்றுப் பட்டியல் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்குத் தனிப் பட்ட பெறுபேற்று ஆவணங்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்பட மாட்டாது.

05. நிகழ்நிலை (Online) மூலமான பரீட்சை விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்த வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலை மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலமாக அனுப்பப்பட்ட அச்சிடப்பட்ட பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைத்த பின்னர், அந்த மென்பிரதி மற்றும் அச்சிடப்பட்ட பிரதி என்பன சரிபார்க்கப்பட்டு (Verify) செல்லுபடியான விண்ணப்பமாக திணைக் களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக் கொள்ளப் படவில்லையா என்பதை நிகழ்நிலை முறைமையினுள் உட்பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கையடக் கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரி மூலமாகவோ அறியத்தரப்படும். நிகழ்நிலை மூலமான விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்த முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும் போது அவ் அறிவுறுத்தல்களைத் தவறாமல் பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்பட மாட்டாது. முழுமையாக பூரணப் படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

06. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படும் என்பதுடன், அதனை நடாத்து வதற்காக அவரால் விதிக்கப்படும் விதிமுறை களைப் பின்பற்றுவதற்குப் பரீட்சார்த்திகள் கடமைப் பட்டுள்ளனர். பரீட்சைக்கான விதிமுறைகள் இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

07. விண்ணப்பப் படிவங்கள் 2025, திசெம்பர் மாதம் 26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில், அதிபர் / கோட்டக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாகவோ அல்லது தங்களது சேவை நிலையத் தலைவர் ஊடாகவோ பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தைப் போட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைத் தெளிவாக எழுத வேண்டும் என்பதுடன், இந்தத் தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

08. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித் துள்ளார்கள் என்ற முன்கூட்டிய தீர்மானத்தின் அடிப்படையில், விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை

அனுப்பி வைத்த விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் நிகழ்நிலை ஊடாக மாத்திரம் வெளியிடப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை வெளியிடப்பட்டவுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அந்த விடயம் இணையத் தள அறிவித்தல் மூலமாகவோ / விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மூலமாகவோ அறியத்தரப்படும். அனுமதி அட்டை கிடைக்காத ஒரு பரீட்சார்த்தி இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிட்ட ஒரு கோரிக்கைக் கடிதத்தை இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப் படுத்துவதற்காகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டின் நிழற்பிரதி மற்றும் விண்ணப்பப் படிவத்தை தபாலில் அனுப்பும்போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவற்றை ஆயத்தமாக வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையைப் பரிசோதித்துப் பார்த்து திருத்தங்கள் இருப்பின் காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு, விண்ணப்பப் படிவத்திற்கமைய உரிய திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தங்களுக்காகச் செய்யப்படும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது

09. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒரு பரீட்சார்த்தி தனக்குரிய பரீட்சை மண்டபத்தில் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், பரீட்சை தினத்தன்று தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

10. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியாகும்.

i. தேசிய ஆளடையாள அட்டை ;
ii. செல்லுபடியான வெளிநாட்டுப் பயணக் கடவுச் சீட்டு ;
iii. செல்லுபடியான இலங்கைச் சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகள் ஆள் அடையாளம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்களை அணியாதிருப்பதை உறுதிப்படுத்தக்கூடியவாறு முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த தருணத்திலிருந்து பரீட்சை நிறைவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காமல் இருக்க வேண்டும்.

11. பரீட்சைக் கட்டணம்: பரீட்சைக் கட்டணம் ரூ. 250.00 ஆகும். பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்துகையில், நிகழ்நிலை முறைமையினூடாக வழங்கப்படும் கீழே உள்ள கட்டணம் செலுத்தும் வழிமுறைகளின் கீழ் மாத்திரமே செலுத்துதல் வேண்டும்.

i. ஏதேனுமொரு வங்கி அட்டை மூலம்
ii. நிகழ்நிலை மூலமான கொடுப்பனவு வசதியுள்ள ஏதாவது ஒரு வங்கி பற்று அட்டை மூலம்
iii. இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கி முறைமை மூலம்
iv. ஏதாவது ஒரு இலங்கை வங்கி கிளையின் மூலம்

(அ) மேலே உள்ள முறைகள் மூலம் கொடுப்பன வுகளை மேற்கொள்ளும் விதம் தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக் குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கொடுப்பனவுகள் கிடைத்தமை குறுஞ்செய்தி மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் செய்தி மூலமாகவோ அறியத்தரப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்திய விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப் பட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துகையில் ஏற்படும் தவறுகளுக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக் கூற மாட்டாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

12. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். குறித்த சட்ட விதிமுறைகளை மீறும் பட்சத்தில் அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும்.

13. சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பொருத்தப்பாடின்மைகள் காணப்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14. இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதாவது விடயம் காணப்படுமாயின், அது தொடர்பாகத் தீர்மானிக்கும் உரிமை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி
அமைச்சு.

கல்வி, உயர் கல்வி
மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
இசுறுபாய,
பெலவத்தை,
2025, நவெம்பர் 14.

11-338

---

## தொழில்நுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

## தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதி – 2025/2026

தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் மூன்று (03) வருடகால முழுநேர தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக்கற்கை நெறியானது, தியகம, ஹோமாகமவில் அமைந்துள்ள தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தப்படும்.

1. **பொதுவானவை** :

தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறியானது, இரண்டு வருட முழுநேர கற்றலையும், ஒரு வருட தொழிற்பயிற்சியையும் உள்ளடக்கியது. இதன் கற்கைமொழி ஆங்கிலம் ஆகும். கற்கைநெறிகள் பின்வரும் கற்கைத்துறைகளில் வழங்கப்படுகின்றது :

(அ) **கடல்சார் கற்கைநெறிகள் (வகை i)**

(i) கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம்
(ii) கப்பற்றுறை கல்வி

(ஆ) **ஏனைய கற்கைநெறிகள் (வகை ii)**

(i) இரசாயன பொறியியல் தொழில்நுட்பம்
(ii) குடிசார் பொறியியல் தொழில்நுட்பம்
(iii) மின்சார பொறியியல் தொழில்நுட்பம்
(iv) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் தொழில்நுட்பம்
(v) தகவல் தொழில்நுட்பம்
(vi) இயந்திரவியல் பொறியியல் தொழில்நுட்பம்
(vii) பல்பகுதிய தொழில்நுட்பம்
(viii) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்

2. **தகைமைகள் :**

2.1. **வயது மற்றும் தகைமைகள்:**

2.1.1. விண்ணப்பதாரிகள் 31.12.2024 ஆந் திகதியன்று 24 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்;

2.1.2. 31.12.2024 இல் 20 வயதுக்குக் குறைந்த விண்ணப்பதாரர்களுக்குக் கப்பற்துறைக் கல்வி கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளுக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கடல்சார் பொறியியல் தொழில் நுட்ப கற்கைநெறிகள் (வகை I) இற்கான விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றுக்கு விசேடமாக தோற்றுதல் வேண்டும் ;

2.1.3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ்வரும் ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கை நெறிக்கு பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் இக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.

2.2. **கல்வித் தகைமைகள்** :

2.2.1. விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உ./த.) பரீட்சையில், கீழ்க் குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றில் (03) சித்திபெற்றிருத்தல் வேண்டும் :

(i) பௌதிகவியல்
(ii) இரசாயனவியல்
(iii) இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம்

அத்துடன், இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் 2022 அல்லது 2023 அல்லது 2024 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ./த.) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.2.2. "கடல்சார் கற்கைநெறிகள்" (வகை I) க்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா. /த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் திறமைச் சித்தி (C pass) பெற்றிருக்க வேண்டும்.

3. **தெரிவு முறைமை:**

3.1. **கற்கைநெறிக்கான அனுமதி :**

3.1.1. அனுமதிக்கான தெரிவானது க. பொ. த. (உ./த.) பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலும், தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தவிருக்கும் தகுதிகாண் பரீட்சை முடிவுகளிலும் தங்கியிருக்கும்.

3.1.2. தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க. பொ. த. (உ./த.) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசையில் தெரிவு செய்யப்படுவர் அதாவது வெட்டுப்புள்ளி முறை (Z-score) அடிப்படையாகக் கொள்ளப்படும். தெரிவு செய்யப்படுபவர்களில், 40% தினர் திறமை அடிப்படையிலும், 60% தினர் மாவட்ட ஒதுக்கீடு முறை அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

3.2 **கற்கைத்துறை:**

கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கையில் தகுதிகாண் பரீட்சைப் பெறுபேறு, விண்ணப்பதாரியின் கற்கைத்துறை தெரிவு வரிசை என்பன இணைந்து கருத்திற் கொள்ளப்படும்.

4. **விண்ணப்பிக்கும் முறை :**

4.1 **விண்ணப்பப்படிவம்** :

4.1.1. முதலில், விண்ணப்பதாரர்கள் கீழே தரப்பட்ட இணையத்தள முகவரியில் பதிவேற்றப்பட்டுள்ள ஒன்லைன் (Online) விண்ணப்பப்படிவத்தின் மூலமாக தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

http://www.itum.mrt.ac.lk

4.1.2. பின்னர், ஒன்லைன் (Online) மூலமாக சமர்ப் பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் சுயமாக பதிப்பிடக்கூடிய பிரதியை விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்யப்படல் வேண்டும் (download the auto generated printable copy of the online application)

4.1.3. பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒன்லைன் அச்சுப்பிரதி (hard copy), விண்ணப்பப்படிவ மானது பதிப்பிடப் பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப் படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் (விண்ணப்பப்படிவத்தின் 3 ஆம் மற்றும் 5 ஆம் கட்டங்களை பார்க்க).

4.1.4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் அச்சுப்பிரதியானது (hard copy), கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "NDT Admission 2025/2026" என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு, "Assistant Registrar, Academic & Student Affairs Division, Institute of Technology, University of Moratuwa, Diyagama, Homagama" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

4.1.5. ஒன்லைன் (Online) விண்ணப்பப்படிவமானது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன், விண்ணப்பப்படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலானது விண்ணப்ப முடிவு திகதி அன்று அல்லது அதற்கு முன்னராக முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

4.1.6. தமது விண்ணப்பப்படிவத்துடன் (hard copy), ஒரு சுய முகவரியிடப்பட்ட ரூபா 110.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9"x4") கடித உறையையும் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

முக்கிய குறிப்பு : ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ஒன்லைன் (Online) விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்தின் பதிப்பிடப்பட்ட நகல் ஆகிய இரண்டையும் விண்ணப்ப முடிவு திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை கருத்திற் கொள்க. ஒன்லைன் (Online) விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி நகல் இரண்டையும் சமர்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்கள் அடுத்த கட்ட பரிசீலனைக்கு கருத்திற் கொள்ளப்படமாட்டார்கள்.

4.2. **கற்கை நெறிக்கான முன்னுரிமை :**

4.2.1. இரண்டு வகையான கற்கைநெறிகள் உள்ளன.

4.2.2. விண்ணப்பதாரிகள் கடல்சார் கற்கைநெறிகள் (வகை 1) அல்லது ஏனைய கற்கைநெறிகள் (வகை 2) அல்லது இரண்டு கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம். இரண்டு கற்கைநெறி களுக்கும் விண்ணப்பிக்குமிடத்து உங்களது விருப்பு தெரிவு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

4.2.3. வகை (1) இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 எனவும் குறிப்பிடுக. கடல்சார் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் மாத்திரம் இதனை நிரப்புதல் வேண்டும்.

4.2.4. கற்கைநெறிகள் வகை (2) இற்கான முன்னுரிமை வரிசையை குறிப்பிடும் போது, முதலாவது விருப்பு 1, இரண்டாவது விருப்பு 2 என்றவாறு உங்களது விருப்ப தெரிவு வரிசையை 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என வரிசைப்படுத்துதல் வேண்டும்.

5.

5.1. **விண்ணப்பக் கட்டணம் :**

5.1.1. ஏதாவதொரு வகை கற்கைநெறிக்கு விண்ணப் பிக்க விரும்பினால் ரூபா 1,000.00 (ஆயிரம் ரூபா) உம் இரண்டு வகையான கற்கைநெறிகளுக்கும் சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூபா 1,200.00 (ஆயிரத்து இருநூறு ரூபா) உம் விண்ணப்ப கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இதனை ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில் மட்டும் தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை வங்கி, ஹோமாகம கிளையில் உள்ள கணக்கு இல. 83062337 க்கு வைப்பிலிட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டை ஒவ்வொரு விண் ணப்பப்படிவத்துடனும் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பக் கட்ட ணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

5.1.2. ஒன்லைன் விண்ணப்பத்துடன் ஒளிப்பிரதி (scan) செய்யப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மற்றும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப்படிவத்தின் பதிப்பிடப் பட்ட நகலுடன் இணைத்து அனுப்பி வைக்கப் படல் வேண்டும்.

5.2. **விண்ணப்ப முடிவுத் திகதி :**

5.2.1. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 30.12.2025.

6. **தகுதிகாண் பரீட்சை மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை :**

ஒவ்வொரு மாவட்டத்திலும், அம்மாவட்டத்திற்குரிய க. பொ. த. (உ./த.) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரிகளே தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும்.

7. **பதிவு செய்தல் :**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், கற்கை நெறிக்கு பதிவு செய்வதற்காக பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :

1. க. பொ. த. (உ./ த.) சான்றிதழ்
2. க. பொ. த. (உ. த.) வெட்டுப்புள்ளி மதிப்பீடு (Z- Score) சான்றிதழ்
3. பாடசாலை விலகற் சான்றிதழ்
4. பிறப்புச் சான்றிதழ்
5. சான்றிதழ்கள் அல்லது வேறு ஆவணங்களின் பெயர் மாற்றம் ஏதும் இருப்பின் அது தொடர்பான சத்தியக் கடதாசி.

8. **முக்கிய குறிப்புகள் :**

8.1. தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்குப் பதிவு செய்த பரீட்சார்த்தி ஒருவர், அக்கற்கைநெறிக் காலப்பகுதியில், இந்நிறுவகத்திலோ அல்லது இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர்கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட வேறு எந்தவொரு உயர்கல்வி நிறுவனத்திலோ ஏதாவதொரு கற்கை நெறியை பயில்வதற்கு அனுமதி பெறுவதற்கும் தகுதியற்றவராவர்.

8.2. ஏற்கனவே இந் நிறுவகத்திலோ அல்லது வேறு ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப் பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

8.3. விண்ணப்பப்படிவத்தில் உள்ள அனைத்து தகவல்களும் உண்மையானதாகவும் சரியான தாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் உள்ள தகவல்கள் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என அறியப்பட்டால் அவ் விண்ணப்பதாரி இக்கற்கை நெறிக்கான கற்றல் நடவடிக்கைகளில் இருந்து இடை நிறுத்தப்படுவார்.

பணிப்பாளர்,
தொழில்நுட்பவியல் நிறுவகம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.

11-339

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.